**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

நாள்: 21.09.2021 செவ்வாய் கிழமை

OS.No.30/2018 DW4: குணசேகரன்

**குறுக்கு விசாரணை**

பி.வா.சா.ஆ.30 ல் கண்ட சொத்தை பெரியசாமி உடையார் மல்லிகைசுந்தரம் என்பவருக்கு தற்போது விற்றுள்ளார். ஆதியில் தாவா சொத்துக்கள் கந்தசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். கந்தசாமி மகன்கள்தான் பெரியசாமி மற்றும் முருகேசன் ஆவார்கள். பெரியசாமி , கந்தசாமியின் மகன் ஆவார். பி.வா.சா.ஆ. 30 ல் கண்ட சொத்து தாவா சொத்துக்குள் வரவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.31 மற்றும் பி.வா.சா.ஆ.32 ஆவணங்களில் கண்ட சொத்துக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.33 முதல் பி.வா.சா.35 வரையான ஆவணங்கள் சர்வே எண். 261/3 பி சொத்துக்கு சம்மந்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ 36 மற்றும் பி.வா.சா.ஆ 37 ஆவணங்கள் சர்வே எண். 244/8 எ சொத்துக்கு சம்மந்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன சர்வே 244/8 எ ஆனது தாவா சொத்துக்குள் வரவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கு சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து வழக்கை திசை திருப்ப முயற்சிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.